# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | STC.No.64/2019 |
| Police station | : | |
| Deposition of witness for Prosecution | : | PW-1 |
| Name | : | வடிவேல் |
| Father Name/Husband Name | : | முனுசாமி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 23.01.2024 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர் )

<u>**முதல் விசாரணை:**</u>

1. நான் இந்த மனுவில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பில் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நான் எனது தரப்பில் 07.11.2018 ம் தேதியிட்ட எதிரி எனது பெயருக்கு வழங்கிய காசோலை எண்-003090 என்ற எண்கொண்ட செண்டிரல் பேங்க் ஆப் இந்தியா ரூ.2,50,000/-திற்கான காசோலை அசல் மசாஆ.1 ஆகவும் மற்றும் காசோலை எண்-021207 என்ற எண்கொண்ட செண்டிரல் பேங்க் ஆப் இந்தியா ரூ.2,50,000/-திற்கான காசோலை அசல் மசாஆ.2 ஆகவும். 003090 என்ற எண்கொண்ட காசோலையை வாங்கியில் செலுத்தப்பட்ட சலான் அசல் மசாஆ.3 ஆகவும். 021207 என்ற எண்கொண்ட காசோலையை வாங்கியில் செலுத்தப்பட்ட சலான் அசல் மசாஆ.4 ஆகவும். 003090 என்ற காசோலை 12.11.2018 அன்று திருப்பப்பட்ட மெமோ மசாஆ.5 ஆகவும். 021207 என்ற காசோலை 12.11.2018 அன்று திருப்பப்பட்ட மெமோ மசாஆ.6 ஆகவும். மறுபடியும் மேற்கண்ட காசோலையை வங்கியில் செலுத்த எதிரி

சொன்னதன் பேரில் பணம் பெற வேண்டி 003090 என்ற எண்கொண்ட காசோலையை 20.12.2018 அன்று வங்கியில் செலுத்தியதற்கான சலான் மசாஆ.7 ஆகவும். 021207 என்ற எண்கொண்ட காசோலையை 20.12.2018 அன்று வங்கியில் செலுத்தியதற்கான சலான் மசாஆ.8 ஆகவும். 003090 என்ற எண்கொண்ட காசோலை 27.12.2018 அன்று திருப்பப்பட்ட மெமோ மசாஆ.9 ஆகவும். 021207 என்ற எண்கொண்ட காசோலை 27.12.2018 அன்று திருப்பப்பட்ட மெமோ மசாஆ.10 ஆகவும். நான் எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் 03.01.2019 ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மசா.ஆ.11 ஆகவும். மேற்கண்ட அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புதல் அட்டை மசா.ஆ.12 ஆகவும். எதிரி அனுப்பிய 21.01.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பு மசா.ஆ.13 ஆகவும். எனவே எனது மனுவின்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.